(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(17).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 ஆகஸ்ட் 09 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 ஆகஸ்ட் 21, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 யூன் 18 ஆம் திகதிய 2389/08 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 15 ஆம் திகதிய 2393/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, ஆகஸ்ட் 21, புதன்கிழமை)**

2152/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சுரங்க மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தினையும் புலமைச்சொத்துச் சட்டத்தினையும், ஆசா மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடட்டின் உரிமத்திற்கு முன்பே தேவைப் படுத்தப்பட்ட உரிமத்தினை நீண்ட காலம் கொண்டிருந்த புத்தளம் இல்மனைட் லிமிடட்டின் (பிஐஎல்) அடிப்படை உரிமைகளையும் மீறி, ஆய்வுக்காகவும் விருத்திக்காகவும் ஆசா மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடட்டுடன் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் (எஸ்எல்சிசி) ஒப்பந்தம் செய்துகொண்டமைக்கான காரணங்களையும் முறைகளையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கைத்தொழில் அமைச்சின் 2023.05.23 திகதிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்களையும்;

(ii) 2023.10.19 அன்று நிதி அமைச்சுக்கு புத்தளம் இல்மனைட் லிமிடட்டினால் அனுப்பிவைக்கப்பட்ட மேன்முறையீட்டின் பெறுபேற்றையும்;

(iii) முறையே 2024.01.30 அன்றும் 2024.03.11 அன்றும் நிதி அமைச்சினால் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமைக்கான காரணங்களையும்;

(iv) நிரல் அமைச்சினாலும் ஏக பங்குடைமையாளரான திறைசேரியினாலும் இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் மீது இயைபுறல் அமுலாக்கப்படும் முறையினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 செப்தெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1157/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சாதாரணமாக வருடமொன்றில் உயர்கல்வி நடவடிக்கைகளின் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவிடப்படும் தொகை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அவர்கள் செல்லும் நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாணவர்கள் பயிலும் பட்டப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iv) அப்பட்டப் பாடநெறிகளை இலங்கையில் கற்க முடியாதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1249/2024

கௌரவ இரான் விக்ரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வழங்கப்பட்டுள்ள GSP+ அந்தஸ்தின் பிரகாரம், தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு ஏற்பாடுகளை அமுல்படுத்துமாறு இலங்கை தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அப்படியாயின், தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை எனின், அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆடைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாதிருப்பது பற்றியும் சில ஆடைத் தொழிற்சாலைகள் அவர்களுக்கு உணவு வழங்குவதை நிறுத்தியுள்ளமை பற்றியும் அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆடைத் தொழிற்சாலைகளில் சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம் மறுக்கப்படுதலானது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், குறிப்பாகப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் பெண் தொழிலாளர்களைப் பாதிக்கிறது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆடைத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும்;

(ii) இந்த மீறல்களுக்குத் தொழில்வழங்குநர்களை வகைப்பொறுப்புடையவர்களாக ஆக்குவதற்கும்;

எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1255/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொள்கலன்களின் கையாளுகை உட்பட கொழும்புத் துறைமுகத்தில் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முனையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு முனையத்தின் உரித்து மற்றும் நிறுவனம் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி ஒவ்வொரு முனையத்தினால் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை மற்றும் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வருமானத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குக் கிடைத்த வருமானம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1288/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலனறுவை மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் தொழிநுட்பப் பிரிவில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பொலனறுவை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் தொழில்நுட்பப் பிரிவை பிரபல்யப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1706/2024

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்துக்குச் சொந்தமான விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விவசாயப் பண்ணைகளுக்குச் சொந்தமான மொத்த காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி மொத்த காணிகளும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்கு விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்தப்படாதுள்ள காணிகள், விவசாய நடவடிக்கைகளுக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறு வழங்கப்படக்கூடிய காணிகளின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1732/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் காணப்படும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பீடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பீடத்திலும் கற்பிக்கப்படுகின்ற பாடநெறிகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்துக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறியியல் பீடத்தில் கற்பிக்கப்படவுள்ள பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) இந்த பொறியியல் பீடத்தை புத்தளம் மாவட்டத்தின், வென்னப்புவ பிரதேசத்தில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பொறியியல் பீடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1746/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நெற் களஞ்சியசாலையினதும் கொள்ளளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு வருடாந்த ரீதியில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நெற் களஞ்சியசாலைகளிலிருந்து உச்சமட்ட பயனைப் பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெற் களஞ்சியசாலைகளில் இன்றளவில் பயன்படுத்தப்படாத நெற் களஞ்சியசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நெற் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நெற் களஞ்சியசாலைகளை மீண்டும் செயற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1755/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாடகை வீடுகளில் வசித்துவரும் குடியிருப்பாளர்களுக்கு காணியின் உரித்தினை உறுதிப்படுத்த முடியாமை மற்றும் தமது பெயரில் பெற்றுக்கொண்ட நீர் கட்டண/ மின்சாரக் கட்டணப் பட்டியல்களை சமர்ப்பிக்க முடியாமை போன்ற காரணங்களால் அவர்களது பிள்ளைகளை அரசாங்கப் பாடசாலைகளில் சேர்க்கின்ற போதும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்ற போதும் அவர்கள் பல்வேறான நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கின்றனர் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1880/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அதிபர் சேவையிலும் இலங்கை ஆசிரியர் சேவையிலுமுள்ள அலுவலர்களுக்கென திட்டவட்டமான இடமாற்றக் கொள்கையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இடமாற்றக் கொள்கையில் உள்ளடங்கியுள்ள பிரதானமான விடயங்களும் அளவுகோல்களும் யாவையென்பதையும்;

(iii) இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள அலுவலர்களுக்கென திட்டவட்டமான இடமாற்றக் கொள்கையொன்று நடைமுறையிலில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள அலுவலர்களுக்காக திட்டவட்டமான இடமாற்றக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2020/2024

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் பேணப்பட்டு வந்த வரையறுக்கப்பட்ட எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் (ETI) நிறுவனம் 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அதன் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தியதன் காரணமாக அதன் வாடிக்கையாளர்கள் அசௌகரியங்களுக்கு ஆளானார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் நிறுவனத்தைக் கலைக்க நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னர் அந்த நிறுவனம் கொண்டிருந்த சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அதிலிருந்து இந்த நிறுவனத்தின் வைப்பாளர்களுக்குச் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பணம் செலுத்தப்படும் திட்டவட்டமான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனியொன்றின் உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் உள்ள பொறுப்புகள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நிகழ்நிலைக் காப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2024 செப்தெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1922/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் இறப்பர் பயிரிடப்பட்டுள்ள மொத்தக் காணியின் அளவு எவ்வளவு;

(ii) மேற்படி காணியின் அளவானது ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இலங்கையின் வருடாந்த இறப்பர் தாள் உற்பத்தி எவ்வளவு;

(iv) இலங்கையின் வருடாந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் எவ்வளவு;

(v) எதிர்காலத்தில் புதிதாக இறப்பர் பயிரிடுவதற்காக திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1946/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் வீட்டு வேலையாட்களாக பணியாற்றும் ஆட்களின் விபரங்கள் தொழில் திணைக்களத்தில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் இலங்கையில் வீட்டு வேலையாட்களாக பணியாற்றுவோரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களின் பாதுகாப்புக்கு தொழில் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1974/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மிகத்துரிதமாக கடலரிப்புக்கு உள்ளாகி வரும் கரையோரப் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள கரையோர வலயங்களில் இன்றளவில் பாதுகாக்கப்பட்டுள்ள கரையோர வலயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) தற்போது பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற கரையோர வலயங்கள் யாவையென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கரையோரப் பாதுகாப்புக் கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) கரையோரப் பாதுகாப்புக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டுக் கடன் மூலமாகப் பெற்றுக்கொண்ட பணத் தொகையானது, மேற்படி மொத்த தொகையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1997/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதியை, பிரதானமாக மாத்தளை மாவட்டத்தின் தேவைகளுக்காக செலவிட சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் முயற்சித்து வருகின்றார் என்பதையும்;

(ii) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் அதற்கு உடன்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இத்தகைய சூழ்நிலையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகத்தை நீக்கி அப்பதவிக்கு வேறொரு நபரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2140/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொல்ப் விளையாட்டு மைதானம், கொல்ப் ரிசோர்ட், 600 வில்லாக்கள், சர்வதேச வைத்தியசாலை, ஆயுர்வேத வைத்தியசாலை, 02 ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் தாவரவியல் பூங்கா என்பவற்றை உள்ளடக்கியதாக எல்பா என்ட் ஒமேகா டிவலப்பர்ஸ் (தனியார்) கம்பனி பெரகலயில் அமுல்படுத்தும் Hidden Valley Eco Golf Resort கருத்திட்டத்திற்கு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் உள்ளது என்பதையும்;

(ii) அதற்காக ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், சொரகுனே குடா கதரகம தேவாலயத்தின் 628 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக அப்போதைய பஸ்நாயக்க நிலமேமார் மற்றும் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் ஆகியோரின் ஆவணங்களைக் கொண்ட சட்டபூர்வமான உறுதிகள், இருமடித்தாள்கள், நிலத்திட்டம் மற்றும் தேவாலய கடமை சன்னஸ் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி கருத்திட்டத்திற்கு பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரமும் மேற்படி தேவாலயங்களின் தற்போதைய நிலமே மற்றும் முன்னைய நிலமேமாரின் இணக்கப்பாடும் வழங்கப்படவில்லை என்பதனால் மேற்படி கருத்திட்டத்தை ஆரம்பிப்பது சுமார் ஏழு வருடம் தாமதமடைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இதுவரை மேற்படி கருத்திட்டத்திற்கு சுமார் 30 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளதனால் அதனை துரிதமாக ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2024 செப்தெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கண்டி மாவட்டத்தில் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களின் எண்ணிக்கையானது விஞ்ஞானம், கணிதம், வணிகம் மற்றும் கலை ஆகிய பிரிவுகளுக்கமைவாக சதவீத அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) கண்டி மாவட்டத்தில் அதிகளவான மாணவர்களை க.பொ.த. (உ/த) விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவுகளில் கற்கையில் ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

46/2024

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலையை பதுளை வரை நீடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iii) அத்தொகை பெறப்படவிருக்கும் மூலங்கள் யாவை என்பதையும்;

(iv) அதனுடன் சம்பந்தப்பட்டதான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கும் திகதி யாதென்பதையும்;

(v) அந்த நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டிருக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலையை பதுளை வரை நீடிக்கும்போது அந்தந்த பகுதிகளின் சூழல் தொகுதிக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த மதிப்பாய்வை மேற்கொண்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) நெடுஞ்சாலை நிர்மாணம் சம்பந்தப்பட்ட பணிகளை சூழலுக்கு குறைவான பாதிப்புகளுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2013/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நகரத்தை சூழவுள்ள காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகளுக்கான நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு காணி உரிமையாளருக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2027/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் —

(i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலிகளின் நீளம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள யானை பாதுகாப்பு வேலிகளின் நீளம் கிலோமீற்றர்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2049/2024

கௌரவ லலித் எல்லாவல,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்டரீதியான மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் முறைமை யாது;

(ii) தற்போது இலங்கையிலுள்ள சட்டரீதியான வெ.ம. 04 விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பியர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை;

(iii) 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெ.ம. 04 மதுவரி அனுமதிப்பத்திரங்கள், பியர் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் மதுபான அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iv) மேற்படி ஒவ்வொரு வெ.ம. 04 மதுபான அனுமதிப்பத்திரம், பியர் அனுமதிப்பத்திரம் மற்றும் மதுபான அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் வழங்கப்பட்ட நபரின் அல்லது கம்பனியின்/நிறுவனத்தின் பெயர் வெவ்வேறாக யாது;

(v) 2023 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள மதுபான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) இது வரையில் இருந்த எந்தவொரு அரசாங்கமும் பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவுக்கு வெ.ம. 04 மதுபான அனுமதிப்பத்திரத்தை வழங்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2024

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணையொன்று தெல்தெனிய-மாபெரிதென்ன பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பண்ணையில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அந்தப் பண்ணையில் காணப்படுகின்ற தொழிலாளர் வீடுகள், வரிசை வீடுகள் மற்றும் தற்காலிக வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள பண்ணையில் வரிசை வீடுகளில் வசிப்பவர்களுக்கு தனி வீடுகளை நிர்மாணித்தளிப்பதற்குத் தேவையான காணிகளை வழங்க அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அத் தீர்மானத்தின்படி, காணி வழங்கும் பணிகளை இதுவரை நடைமுறைப் படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2089/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற தனியார் மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்தின் பெயர் மற்றும் உரிமையாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்தில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தெகை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வது தொடர்பில் கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் இலங்கை மின்சார சபைக்குப் பாதகமானவை என்பதை அறிவாரா என்பதையும்?

(ii) தனியார் மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வது தொடர்பில் ஒரு புதிய சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2106/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகம் ஒவ்வொன்றிலுமுள்ள பீடங்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள், நடத்தப்படுகின்ற கற்கை நெறிகளின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கற்கை நெறிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அத்தகைய பல்கலைக்கழகங்களைக் கண்காணிப்பதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும் காணப்படுகின்ற நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2156/2024

கௌரவ சட்டத்தரணி ரவூப் ஹக்கீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'A' தரத்திலான ஆதார வைத்தியசாலையாகவிருக்கும் புத்தளம் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, வதிவிட நோயாளர் பிரிவு மற்றும் பல்வேறு கிளினிக்குகளுக்கு வருகை தருகின்ற நோயாளர்களுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் இடவசதிகள் அவ்வைத்தியசாலையில் போதுமானதாக இல்லை என்பதையும்;

(ii) இந்த வைத்தியசாலைக்கு போதிய பணியாட்டொகுதி இல்லை என்பதுடன், மருத்துவர், அபிவிருத்தி அலுவலர், கவனிப்பாளர், இதயத்துடிப்பு மின்வரைபு பதிவாளர், நோயாளர் அறை எழுதுநர், நீர்க்குழாய்த் தொழிலாளி, தையல் ஊழியர் (பெண்), சிற்றூழிய மேற்பார்வையாளர், சமையற்காரர், தொலைபேசி இயக்குநர், மேசன், தச்சன் மற்றும் சாரதி போன்ற பதவிகளில் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2157/2024

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை வித்தியாலயத்தின் மாணவர் விடுதி உள்ளிட்ட கட்டிடங்களைக் கையகப்படுத்தி மேற்படி வித்தியாலயத்திற்குரிய காணியில் வலயக் கல்வி பணிமனையும் களுத்துறை கோட்டக் கல்வி பணிமனையும் நிறுவப் பட்டுள்ளதாகவும்;

(ii) வித்தியாலயத்தின் தேவைகளுக்காக மேற்படி காணியையும் கட்டிடங்களையும் மீள வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக 1990.10.15 ஆம் திகதி கட்டிடங்களின் ஒரு பகுதி களுத்துறை வித்தியாலயத்திற்கு மீள வழங்கப்பட்டதாகவும்;

(iii) மாகாண அரச நிறுவனங்களை ஒரே கட்டிடத்தில் நிறுவும் திட்டத்திற்கமைவாக களுத்துறை வடக்கு, ஸ்ரீ சுமங்கள வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாடிக் கட்டிடமொன்றில் ஏனைய அலுவலகங்கள் நிறுவப்பட்டிருந்தாலும் அதில் மேற்படி கல்விப் பணிமனைகள் மாத்திரம் இதுவரை நிறுவப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட இரண்டு கல்விப் பணிமனையையும், மேற்படி மாடிக் கட்டிடத்தில் நிறுவுதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) அவை மேற்படி கட்டிடத்தில் நிறுவப்படுமா;

(iii) ஆமெனில், எக்காலப்பகுதியில்;

(iv) இன்றேல், மேற்படி பணிமனைகள் வேறொரு கட்டிடத்தில் நிறுவப்படுமா;

(v) ஆமெனில், அக்காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 செப்தெம்பர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

314/2024

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் உள்ள மாவட்ட கிரிக்கெட் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு சங்கத்திலும் கடமையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அலுவலர்களின் சம்பள படிநிலைக்கும் மாவட்ட கிரிக்கெட் சங்கங்களின் அலுவலர்களின் சம்பள படிநிலைக்கும் இடையில் முரண்பாடு நிலவுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அம்முரண்பாட்டை நீக்குவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

360/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளிகளின் (முன் பிள்ளைப்பருவ சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) எண்ணிக்கை;

(ii) உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள், தனியார் துறை மற்றும் அரசாங்க இணை நிறுவனங்கள் என்ற வகைப்படுத்தலின் அடிப்படையில் இயங்கிவரும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை;

(iii) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களின் கீழ் கல்வி வழங்கப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை;

(iv) முன்பள்ளிக் கல்வி பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை;

(v) முன்பள்ளிக் கல்வி பெறாத 3-5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை;

(vi) முன்பள்ளி நிர்வாகிகளின் எண்ணிக்கை;

யாதென்பதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவாக தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வி பெறாதமையின் மீது தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மொத்த முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது அவர்களின் கல்வித் தகைமைகளின் படி வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முன்பள்ளி டிப்ளோமா தகைமைப்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது, மொத்த முன்பள்ளி ஆசிரியர்களின் சதவீதமாக யாதென்பதையும்;

(iii) முன்பள்ளிகளுக்கான பொதுப் பாடவிதானம்/பொதுப் பாடநெறி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைநூல் உள்ளனவா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளை ஒழுங்குறுத்துவதற்கான முறையியல் காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இல்லையெனில், அவை இயங்கும் முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

376/2024

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஆயுர்வேத பெரியாஸ்பத்திரிகள், மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனைகள், கிராமிய ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள் மற்றும் சமுதாய சுகாதார மருத்துவ அலுவலகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள் மற்றும் அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

383/2024

கௌரவ தயாசிறி ஜயசேகர,— முதலீட்டு மேம்பாடு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி உற்பத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்தொழிற்சாலை இயங்கிய காலத்தில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட சீனி மற்றும் மதுசாரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலை மூடப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூடப்பட்டதை தொடர்ந்து அத்தொழிற்சாலையை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக முன்வந்த நிறுவனம்/நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) மேற்படி தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

468/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் பல்வேறு காரணங்களுக்காக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை மற்றும் குறிப்பிட்ட மருந்துகளின் பெறுமதி என்பன வெவ்வேறாக யாவை;

(iii) மருந்துகளை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மருந்துகளை களஞ்சியப்படுத்துவது தொடர்பில் கணக்காய்வு அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள வினவல்கள் யாவை;

(ii) கணக்காய்வு வினவல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

514/2024

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில், பலாகல பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்கிரியாகம பொலிஸ் பிரிவில் 'ஹுருல்லேவ' எனும் பெயரில் தொல்பொருள் தளமொன்று உள்ளதென்பதையும்;

(ii) கடந்த காலங்களில் மேற்படி தொல்பொருள் தளம் சிலரால் டோசர் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அழிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

545/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட சபை பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிட்ட தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) பிரச்சார நடவடிக்கைகளுக்கு நிறுவனமொன்றைத் தெரிவுசெய்கையில் மேற்படி சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்ற தொகை அபிவிருத்தி லொத்தர் சபையின் மொத்த வருமானத்தின் எத்தனை சதவீதம் என்பதையும்;

(v) பிரச்சார நடவடிக்கைகளைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி சபையின் லொத்தர் சீட்டு விற்பனையில் ஏற்பட்ட வளர்ச்சி வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

567/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் காணி உறுதி வகைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உறுதி வகைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அரச காணிகளை ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வழங்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கையும் எதிர்காலத்தில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள காணி உறுதிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

598/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை, வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோராண்டின் இறுதியிலும் வெளிநாடு சென்றிருந்த இலங்கையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் மீண்டும் நாடு திரும்பிய ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வெறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை, வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவு ஒவ்வோராண்டு வாரியாக ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலத்தில் இவர்களால் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சி ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவர்களால் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி அளவு வீழ்ச்சியடைவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

612/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1978 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கம் வசமிருந்த அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் ஏனைய உற்பத்தி, சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு மத்தியில் இன்றளவில் இயங்கி வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற அரசாங்கத்தின் உடைமையுரிமை சதவீத அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட உற்பத்தி/சேவை நிறுவனங்களுள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுள் இன்றளவில் வங்குரோத்தடைந்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?